மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உரிமங்கள் வழங்குவது பம்பாயிலே உள்ள மைய அரசுக்குச் சொந்தமான நூல் ஆணையர், டெக்ஸ்டைல் கமிஷனர் ஆவார். போடப்படுகின்ற மனுக்கள் அனைத்தையும் அவர்கள் நேரடியாகப் பரிசீலித்து உரிமம் வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலரை அல்லது சிலரைப் பார்த்து புதிதாக மனுச் செய்து அந்தப் பகுதியிலே நூற்பாலையைத் துவங்க நடவடிக்கை எடுப்பார்களானால் அரசும் அதற்கு உதவி செய்யும்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலைகளுக்கு உரிமம் வழங்கி 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் இதில் நூற்றுக்கு 75 சதவீதம் ஆலைகளின் கட்டுமானப் பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. இப்படி ஒரு உரிமம் வழங்குகிறபோது, இந்த நிபந்தனைக்கு உட்பட்டு, இந்த ஆண்டுக்குள், அல்லது இத்தனை மாதங்களுக்குள் வேலைகள் துவங்கப்படவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு அந்த உரிமங்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல பல பேர்கள்—தனியார்கள்—மனு செய்து உரிமங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். அதற்குப் பின்னர் வேலைகளைத் துவங்குவது இல்லை. 1981-ஆம் ஆண்டிலே நூற்பாலைகளில் மொத்தமாக லாபம் வருகிறது என்பதாலே பலர் இப்படி மனுச் செய்தார்கள். அதையெல்லாம் கருத்திலே கொண்டு நாம் இப்போது 1981 ஜனவரிக்குப் பின்னாலே நூற்பாலைகள் நிறுவ வேண்டுமென்றால், கூட்டுறவுச் சங்கங்கள், அதேபோல் கம்பெனிகள் மட்டுமே அவற்றுக்கான அனுமதி கொடுக்க வேண்டும் என்று அவர்களே ஒரு ரெஸ்ட்ரிக்ஷன் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே இப்போது உரிமங்கள் மிகக் குறைவாகத்தான் கொடுக்கப்படுகின்றன.

983 பிப்ரவரி 7]

மதுரை மாவட்டம் பாளையம் பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 135—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—திருச்சி மாவட்டங்களுக்கு இடையே பாளையம்—மைலம் கிராமம் அருகில் தொழில் இலாகாவைச் சேர்ந்த புவியியல் பிரிவு ஆய்வு செய்ததா ?

(ஆ) ஆம் எனில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு சிமெண்ட் தொழிற்சாலை துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தேவர் மலை, வரவணை, பாளையம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் இருப்புக்களைப் பயன்படுத்தி மதுரை மாவட்டம், பாளையம் என்னுமிடத்தில் ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமிண்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இசைவுக் கடிதம் கோரி தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மைய அரசிற்கு விண்ணப்பித்துள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

*வினா எண். 136—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகா பாளையம் அருகில் சிமெண்ட் ஆலை அமைக்க மாநில அரசுக்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(ஆ) இல்லையெனில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) மதுரை மாவட்டம், பாளையம் பகுதியில் ஒரு புதிய சிமெண்ட் ஆலை நிறுவ அனுப்பிய விண்ணப்பம் இன்னும் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் சிமென்ட் ஆலை ஆரம்பிக்க வேண்டிய தகுதிகள் அனைத்தும் இருக்கின்றன. ஆனால் மத்திய சர்க்கார் காலதாமதம் செய்து கொண்டு வருகிறது. ஆகவே தொழிற்சாலைகள் அமைக்க லைசென்ஸ் வழங்கும் உரிமை மத்திய அரசிடம் இருப்பதால்தான் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மொத்தமாக இத்தனை லைசென்ஸ் எங்களுக்கு வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் போராடி வாங்குமா ? அதுமட்டும் அல்லாமல் தமிழ்நாடு முழுவதும்,